| | |
|---|---|
| **வழக்கு எண்** | C.P.53/2024 |
| **நாள்** | 02.09.2025 |
| **சாட்சி** | WW – 1 திரு. பிரபு |

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை : -**

நான் கம்பெனியில் பணி செய்யம்போது Project Lead என்ற பணிப்பொறுப்பில் இருந்தேன். என் பணி விடுப்பு நான் 10.05.2024 ஆகும். நான் பணியில் இருந்து விலகும்போது இறுதியாக ரூ.78,200/- சம்பளம் பெற்றேன் . என் அடிப்படை ஊதியம் ரூ.46,123/- ஆகும். நான் Projet Lead தலைமை பொறுப்பில் இருந்தேன். என் குழுவில் எனக்கு கீழ் 10 பேர் பணி செய்தார்கள். என் பணிப்பொறுப்பு Managirial Capacity ஆகும். தொழிற்தகராறு சட்டத்தின் கீழ் என் பணி அமையாததால் மனுவில் கண்டபடி நான் கோரியுள்ள பரிகாரம் இந்த நீதிமன்றத்தில் பெற முடியாது உரிய நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால் சரியல்ல. சத்தியசீலன் C.P.54/2024 மனுவின் மனுதாரர் நான் பணிபுரிந்த அதே காலத்தில் அதே நிறுவனத்தில் என்னுடைய உயர் அதிகாரியாக Contry Head -India என்ற பணிப்பொறுப்பில் இருந்தால் என்றால் சரிதான். அவர் சொல்லக்கூடிய அலுவலக நடைமுறைகள் மற்றும் அவரின் அறிவுறுத்தல்படி நான் எனது பணியை செய்தேன் என்றால் சரிதான். எனக்கு சம்பளம் வழங்குதல் மற்றும் என்னுடைய வருகைப்பதிவேடு, பணி சம்பந்தப்பட்ட

இதர ஆவணங்கள் பராமரிக்கும் பொறுப்பு சத்தியசீலன் தான் பார்த்துக்கொள்வார். மேலும் மேற்படி எங்கள் நிறுவனத்தில் பணி செய்யும் பணியாளர்கள் சம்பந்தப்பட்ட சேவைக்குறைபாடு, புகார்கள், நிர்வாக தகராறுகள் மற்றும் நிர்வாகம் சார்ந்த பிரச்சனைகளை கையாளும் அதிகாரம் மேற்படி சத்தியசீலன் வசம்தான் இருந்தது என்றால் சரிதான். Lumiere system என்ற நிறுவனத்தில் இருந்து எனக்கு Email ID எதுவும் வழங்கப்படவில்லை. நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரிந்த அதே காலத்தில் Lumiere System என்ற நிறுவனத்திலும் Dual Employment என்ற வகையில் பணிபுரிந்ததாக என் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை மறுத்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. நான் அவ்வாறு குற்றசாட்டில் கண்டதுபோல் இரு நிறுவனங்களிலும் பணிபுரியவில்லை. நான் பணிசெய்த காலத்தில் நிர்வாக நடைமுறைக்கு பயன்படுத்திய கணினி மற்றும் Email ID, Digital Transaction Communication சம்பந்தப்பட்ட விபரம் குறித்து ஆணையர் நியமித்து அவற்றை பரிசீலனை மற்றும் ஆய்வு செய்ய எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. நான் பணிசெய்த காலத்தில் என் குழுவில் பணிசெய்த பெண் பணியாளர்கள் எனக்கு எதிராக புகார் கொடுத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டதா என்றால் அவ்விதம் எதுவும் நடக்கவில்லை. நான் பணிபுரிந்த காலத்தில் மேற்படி நிறுவனத்திற்கு சொந்தமான Computer Hard Disk சேதப்படுத்தியதாக குற்றச்சாட்டு எழுந்தது நான் அதை மறுத்தேன். அந்த சேதத்திற்கு நிர்வாகமே பொறுப்பு

எனக்கு எந்த சம்பந்தமும் இல்லை. அந்த காலகட்டத்தில் பணியில் இருந்த சத்தியசீலன் Country Head India அவரே பொறுப்பாவார். நான் பணிக்காலத்தில் தொடர்ந்து 3 மாதங்கள் பணி செய்ததற்கான வருகைப்பதிவேடு விபரம் நான் தாக்கல் செய்யவில்லை. நான் பணிக்காலத்தில் உரிய நேரத்தில் பணிக்கு செல்லாமல் Default ஆக இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மனுவில் கோரியுள்ள Experience Certificate வழங்குதல் மற்றும் சம்பள பாக்கி உள்ளிட்ட பரிகாரத்தில் Experience Certificate எனக்கு வழங்கப்பட்டுவிட்டது சம்பள பாக்கி மட்டுமே வழங்கப்பட வேண்டும். மேற்படி நான் பணி செய்த நிறுவனம் போதிய வருமானம் மற்றும் லாபம் இல்லாததால் நிறுவனத்தை மூடுவதாகவும் என்னை பணியில் இருந்து நீக்கம் செய்வதாகவும் Email மூலம் எனக்கு தகவல் வந்தது. நான் ஒருமாத நோட்டீஸ் கால அவகாசம் கேட்டேன் அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. நான் ஒரு காலத்திலும் மேற்படி நிறுவனத்தில் Workman பணியில் இல்லாமல் Managerial Capacity -ல் இருந்ததால் நான் கோரியுள்ள பரிகாரம் பெற அறுகதை இல்லை என்றால் சரியல்ல. மேலும் நான் கேட்டுள்ள பரிகாரத்தை பொறுத்து உரிய நீதிமன்றத்தை நாடவும் என்றால் சரியல்ல. மற்றும் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.